28 DEC 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*(1995 ஜூலை மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---

1994 ஓகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

**கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

விலை : ரூபா 1.65 தபாற் செலவு : ரூபா 2.00

1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1995, ஜூலை மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 63/94

குடியியல், குற்றவியல் நடவடிக்கைகள் கணனிகள் மூலம் சமர்ப்பிக்கப் படும் கூற்றுக்களில் அடங்கியுள்ள கட்புல, செவிப்புலப் பதிவுகளினதும் தகவலினதும் ஏல்தகைமைக்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அத னோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங் களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (சிறப் பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. சான்றுக் கட்டளைச் சட்டத்தில் அல்லது ஏதேனும் வேறு எழுத்தி லான சட்டத்தில் முரணாக எது எவ்வாறு இருப்பினும், இதன்கண் ஏற் பாடு செய்யப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற் பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும். வலுவேற்பு.

3. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிப்பதிலிருந்து எழு கின்றதும் அல்லது அதற்கு இடைநேர்விளைவானதும் இச்சட்டத்தில் ஏற் பாடு செய்யப்பட்டிராததுமான ஏதேனும் விடயத்தைத் தீர்மானிப் பதற்கென சான்றுக் கட்டளைச் சட்டத்தினது அல்லது ஏதேனும் வேறு சட்டத்தினது ஏற்பாடுகள், தோதானவிடத்தும் விடயத்தின் நீதி தேவைப்படுத்துகின்றவாறான திரிபுகளுடனும் ஏற்றுப் பிரயோகிக்கப் படுதல் வேண்டும். ஏற்பாடிலாச் சந்தர்ப்பம்.

(2) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்க ளைத் தீர்மானிப்பதற்குச் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்கென, சான்றுக் கட்டளைச் சட்டத்தில் அல்லது அத்தகைய வேறு சட்டத்தில் ஆவணங்கள் தொடர்பான அல்லது அதுபோன்ற ஒரு விடயத்தை ஆளுகின்ற ஏற்பாடுகள், நீதியின் நலன் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய பொருத்தமான திரிபுகளுடன் இச்சட்டத்தின்கீழ் ஏல்தக்க தான ஒரு பதிவு, மீளாக்கம் அல்லது கூற்று அல்லது வேறு சான்று விட யத்தில் ஏற்றுப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங் களைத் தீர்மானிப்பதற்கும், மேற்கூறப்பட்டவாறாக சான்றுக் கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்றுப் பிரயோ கித்தல் தோதானதாக அல்லது நடைமுறைச் சாத்தியமானதாக இல்லாத விடத்து, நீதிமன்றமானது, அதன் உள்ளார்ந்த தத்துவத்தைப் பிர யோகிக்கையில், நீதியின் நலன் தேவைப்படுத்துகின்றவாறான அத்த கைய கட்டளையை ஆக்குவதன்மூலம் அத்தகைய விடயத்தைத் தீர் மானிக்கலாம்.

## பாகம் I

### சமகாலப் பதிவுகள்

சமகாலப் பதிவுகள்.

4. (1) ஒரு நிகழ்வின் நேரடி வாய்மொழிச் சான்று ஏல்தக்கதாக விருக்கின்ற ஏதேனும் வழக்கு நடவடிக்கையில்—

(அ) இலத்திரன்வழி அல்லது பொறிமுறைவழிப் பயன்பாட்டால் பதிவு அல்லது மீளாக்கம் செய்யப்பட்டது;

(ஆ) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கமைய, பதிவு அல்லது மீளாக்கள் புலன்களால் உய்த்தறியக்கூடியதாகச் செய்வதற்கான அத்தகைய முறையில் இயக்கப்படக்கூடியது, வெளிக்காட்டப்படக்கூடியது அல்லது மீளாக்கம் செய்யக்கூடியது ;

(இ) பதிவை அல்லது மீளாக்கத்தைச் செய்வதில் முக்கியமாகவிருந்த எல்லா நேரங்களிலும் விடயத்திற்கேற்ப பதிவை அல்லது மீளாக்கத்தைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரம் அல்லது உபாயம் முறையாகத் தொழிற்படுகிறது, அல்லது அது முறையாகத் தொழிற்படவில்லையெனில் எவ்வகையில் அது முறையாகத் தொழிற்படாதிருக்கின்றதோ, அல்லது தொழிற்படவில்லையோ அவ்வகை, பதிவின் அல்லது மீளாக்கத்தின் செம்மையைப் பாதிக்கக் கூடியவாறான அத்தகைய தன்மையினதானதில்லை;

(ஈ) பதிவு அல்லது மீளாக்கம், அத்தகைய பதிவு அல்லது மீளாக்கம் செய்யப்படும்போது செய்யப்பட்ட பின்னர் எத்தன்மைத்தான எந்த முறையிலும் மாற்றப்படவில்லை அல்லது கைபோடப்படவில்லை, அல்லது அத்தகைய பதிவை அல்லது மீளாக்கத்தைச் செய்தபின்னர் எல்லா முக்கிய நேரங்களிலும் அது பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைக்கப்பட்டது அத்துடன் அத்தகைய கட்டுக்காப்பிலிருக்கும் போது அத்தகைய பதிவு அல்லது மீளாக்கம் மாற்றப்படுவதற்கு அல்லது கைபோடப்படுவதற்கான சாத்தியத்தைத் தடுப்பதற்குப் போதிய முற்காப்புகள் எடுக்கப்பட்டன,

எனக் காட்டப்பட்டால், அந்நிகழ்வைத் தாபிக்கக்கூடியதான அதன் ஏதேனும் சமகாலப் பதிவு அல்லது மீளாக்கம் அந்நிகழ்வின் சான்றாக ஏல்தக்கதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் திருப்திப்படுத்தப்படுமாயின், பதியப்பெற்ற அல்லது மீளாக்கம் செய்யப்பட்ட நிகழ்வு எவரேனும் ஆளினால் சாட்சியப்படுத்தப்படினும் அல்லாவிடினும், அப்பதிவு அல்லது மீளாக்கம் அத்தகைய நிகழ்வின் சான்றாக ஏல்தக்கதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதிவை அல்லது மீளாக்கத்தை—

(அ) புலன்களினால் உய்த்தறியக்கூடியதாகச் செய்வதற்கான அத்தகைய முறையில் இயக்கச்செய்ய, வெளிக்கொணர அல்லது மீளாக்க முடியாதவிடத்து ;

(ஆ) அவ்வாறு உய்த்தறியக்கூடியதாக ஆனுல் ஒரு குறிப்பிட்ட அறிவியலில பரிட்சயமில்லாத ஓர் ஆளுக்குப் புரியாததாகவிருக்குமிடத்து ; அல்லது

(இ) அதன் மூலவடிவத்தில், அதை உய்த்தறியவும், சான்றாகப் பெறவும் வசதியாக இல்லாத அத்தகைய தன்மையினதாகவுள்ள விடத்து,

நீதிமன்றமானது, புரியக்கூடியதும் புலன்களால் உய்த்தறியக்கூடியதுமான அத்தகைய பதிவின் அல்லது மீளாக்கத்தின் விடயத்துக்கேற்ப ஒரு சொல் மாறறத்தை, மொழிபெயர்ப்பை மாற்றத்தை அல்லது உரு மாற்றத்தைச் சான்றாக ஏல்தக்கதாக்கலாம்.

(4) ஏதேனும் தோதான சாதனத்தின் துணையுடன் அல்லது அத் துணையில்லாமல் அல்லது மனிதத் தலையீட்டுடன் அல்லது தலையீடில்லாமல், ஒரு எந்திரத்தால் அல்லது உபாயத்தால் அல்லது பல எந்திரங்களினுல் அல்லது உபாயங்களினுல் அல்லது ஏதேனும் இணைப்பில் வெவ்வேறு எந்திரங்களினுல் அல்லது உபாயங்களினுல் இலத்திரன் அல்லது பொறிமுறை வழிகளில் பயன்பாட்டினுல் பதிவு அல்லது மீளாக்கம் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் சான்று ஏல்தக்கதாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய சான்றின் ஓர் இணைப்படி, இணைப்படி எந்த மூலத்திலிருந்து செய்யப்பட்டதோ அந்த மூலத்தைப் போன்று அதேமுறையிலும் அதே அளவிற்கும் ஏல்தக்கதாதல் வேண்டும்.

## பாகம் II

### கணனிச் சான்று

5. (1) எந்த வழக்கு நடவடிக்கையில் ஒரு நிகழ்வின் நேரடி வாய் மொழிச்சான்று ஏல்தக்கதாகவிருக்குமோ அந்த ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஒரு கணனியினுல் தயாரிக்கப்பட்ட ஏதேனும் கூற்றிலுள்ளதும் அந்நிகழ்வைத் தாபிக்க உதவுகின்றதுமான ஏதேனும் தகவல், அது பின்வருமாறு காட்டப்பட்டால், அந்நிகழ்வின் சான்றாக ஏல்தக்கதாதல் வேண்டும் — கணனிச் சான்று.

(அ) இரண்டாம் உட்பிரிவிற்கமைவாக கூற்றானது, தயாரிக்கப்பட்ட வடிவத்தில் அல்லது அது மீளாக்கம் செய்யப்பட்ட வடிவத்தில் புலன்களினுல் உய்த்தறியக்கூடியதான ஆற்றலுடையது ;

(ஆ) கூற்றைத் தயாரிக்கும் கணனி எல்லா முக்கிய நோக்கங்களிலும் முறையாகத் தொழிற்படுகிறது, அல்லது அவ்வாறு இல்லாவிடின் எந்தவகையில் அது முறையாகத் தொழிற்படாதிருக்கின்றதோ அல்லது தொழிற்படவில்லையோ அந்தவகை. கூற்றின் தயாரிப்பை, அல்லது அதில் அடங்கியுள்ள தகவலின் செம்மையைப் பாதிக்கக்கூடியவாறான அத்தகைய தன்மையினதானதில்லை.

(இ) கணனிக்கு வழங்கப்பட்ட தகவல் செம்மையானது என்பதுடன், கூற்றில் அடங்கியுள்ள தகவல் கணனிக்கு அவ்வாறு வழங்கிய தகவலை மீளாக்கம் செய்கிறது அல்லது அத்தகவலிலிருந்து பெறப்படுகிறது :

ஆயின், எந்த ஒரு காலப்பகுதியின்போது ஒழுங்காகக் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் செயற்பாட்டின் நோக்கங்களுக்காகத் தகவலைக் களஞ்சியப்படுத்த அல்லது நடைமுறைப்படுத்த கணனி ஒழுங்காகப் பயன்படுத்தப்பட்டதோ அந்த ஒரு காலப்பகுதியின்போது கூற்றில் அடங்கியுள்ள தகவல் கணனியினால் தயாரிக்கப்பட்டதெனக் காட்டப்படுகின்றவிடத்து, பின்வருமாறு காட்டுதல் போதுமானதாதல் வேண்டும் :—

(i) சொல்லப்பட்ட காலப்பகுதியின்போது அத்தகைய செயற்பாட்டின் சாதாரண நெறியில், கூற்றில் அடங்கியுள்ள தகவல் எந்த வகையினதான அல்லது அவ்வாறு அடங்கியுள்ள தகவல் எந்த வகையிலிருந்து பெறப்பட்டதோ அந்த வகையினதான தகவல் கணனிக்கு ஒழுங்காக வழங்கப்பட்டது ; அத்துடன்

(ii) கூற்றில் அடங்கியுள்ள தகவல், அத்தகைய செயற்பாட்டின் சாதாரண நெறியில் கணனிக்கு ஒழுங்காக வழங்கப்பட்ட தகவலிலிருந்து மீளாக்கம் செய்யப்படுகிறது அல்லது பெறப்படுகிறது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் கூற்று —

(அ) புலன்களினால் உய்த்தறியக்கூடியதாகச் செய்வதற்கான அத்தகைய முறையில் அதனை இயங்கச் செய்ய, வெளிக்கொணர அல்லது மீளாக்க முடியாதவிடத்து;

(ஆ) அவ்வாறு உய்த்தறியக்கூடியதாக ஆனால் ஒரு குறிப்பிட்ட அறிவியலில் பரிட்சயமில்லாத ஓர் ஆளுக்குப் புரியாததாகவிருக்குமிடத்து அல்லது வசதியாக இல்லாத அத்தகைய தன்மையினதாகவுள்ளவிடத்து;

(இ) அதன் மூலவடிவத்தில் அதை உய்த்தறியவும் சான்றுகப் பெறவும் வசதியாக இல்லாத தன்மையினதாகவுள்ளவிடத்து,

நீதிமன்றமானது, புரியக்கூடியதும், புலன்களால் உய்த்தறியக்கூடியதுமான அத்தகைய கூற்றின், விடயத்திற்கேற்ப, ஒரு சொல்மாற்றத்தை, மொழிபெயர்ப்பை, மாற்றத்தை அல்லது உருமாற்றத்தை ஏற்கத்தாக்கலாம்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் சான்று ஏற்கத்தகாதவிருக்கின்றவிடத்து, அத்தகைய சான்றின் ஓர் இணைப்படி, எந்த மூலத்திலிருந்து இணைப்படி செய்யப்பட்டதோ அந்த மூலத்தைப்போன்று அதே முறையிலும் அதே அளவிற்கும் ஏற்கத்தக்கதாதல் வேண்டும்.

(4) (அ) ஒரு கூற்றில் அடங்கியுள்ள தகவல், அத்தகைய கூற்று ஒரு தனிக் கணனியினால், அல்லது பல கணனிகளினால், அல்லது கணனிகளின் ஏதேனும் இணைப்பினால், அல்லது வெவ்வேறு கணனிகளினால், அல்லது ஏதேனும் இணைப்பில் தொடர்ச்சியாகத் தொழிற்படும் பல்வேறு கணனி

களினால், அல்லது ஏதேனும் ஒழுங்குவரிசைப்படி தொடர்ச்சியாகத் தொழிற்படும் கணனிகளின் பல்வேறு இணைப்புகளினால் தயாரிக்கப்பட்டிருப்பின், ஒரு கணனியினால் தயாரிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் கூற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட எல்லாக் கணனிகளும், இச்சட்டத்தின் நோக்கத்திற்காக, ஒரு தனிக் கணனியாக அமைவதாக கொள்ளப்படுதலும் வேண்டும்; அத்துடன் இச்சட்டத்தில் ஒரு கணனிக்கான குறிப்பீடு எதுவும் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) மனிதத் தலையீட்டுடன் அல்லது மனிதத் தலையீடின்றி நேரடியாக ஒரு கணனியினால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின் மூலமாக ஒரு கூற்று தயாரிக்கப்பட்டிருந்தாலும் ஒரு கணனியினால் தயாரிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ) தகவலானது மனிதத் தலையீட்டுடன் அல்லது மனிதத் தலையீடின்றி, அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின் மூலமாக அவ்வாறு நேரடியாக வழங்கப்பட்டிருந்தாலும், தோதான ஏதேனும் வடிவத்தில் ஒரு கணனிக்கு வழங்கப்படுமாயின், அதற்கு வழங்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஈ) தகவலானது, கணனிக்கிடுவதால், ஒப்பிடுவதால் அல்லது எந்த நடைமுறைக்கு ஆற்றலுடையதாகவுள்ளதோ அந்த வேறு ஏதேனும் நடைமுறையினால் பெறப்பட்டிருந்தால் அல்லது மீளாக்கம் செய்யப்பட்டிருந்தால் அத்தகைய தகவல், கணனிக்கு வழங்கப்பட்ட தகவலிலிருந்து பெறப்பட்டது அல்லது மீளாக்கம் செய்யப்பட்டதெனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(உ) எவரேனும் ஆளினால் மேற்கொள்ளப்படும்போது அச்செயற்பாடுகளின் போதல்லாது வேறுவகையில் தொழிற்படுத்தப்படும் கணனி ஒன்றினால் அச்செயற்பாடுகளின் நோக்கத்துக்காக ஏதேனும் தகவலைக் களஞ்சியப்படுத்தும் அல்லது நடைமுறைப்படுத்தும் நோக்குடன் கணனியொன்றுக்கு அத்தகைய தகவல் வழங்கப்படுமிடத்து, கணனிக்கு முறையாக வழங்கப்பட்ட அத்தகவல் அச்செயற்பாடுகளின்பொழுது அதற்கு வழங்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### பொது ஏற்பாடுகள்

சத்தியக் கடதாசிச் சான்று.

6. (1) ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் இச்சட்டத்தின் 4 ஆம் அல்லது 5 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் சான்றை அளிக்க எவரேனும் திறத்தவர் உத்தேசித்திருக்கின்றவிடத்து, பின்வரும் எவையேனும் விடயங்களைக் கையாளுகின்றதும், இயைபான எந்திரத்தின், உபாயத்தின் அல்லது கணனியின் தொழிற்பாடு தொடர்பாக அல்லது இயைபான செயற்பாட்டின் முகாமை தொடர்பாக, இவற்றில் எத்தகைய விடயம் தொடர்பிலும் ஒரு பொறுப்பான நிலைமையிலிருக்கின்ற ஓர் ஆளினால் செய்யப்படக்கூடாதெனக் கொள்ளப்படுவதுமான ஒரு சத்தியக் கடதாசி, ஒரு சாட்சியாக அத்தகைய ஆளை அழைக்காமல், எல்தக்கதாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் குறிப்பிடப்பட்ட விடயங்களின் சான்றாகவிருத்தலும் வேண்டும் ; அதாவது,

(அ) அத்தகைய சான்று, அத்தகைய வழக்கு நடவடிக்கையில் எண்பிக்கப்பட நாடப்பட்ட ஒரு நிகழ்வின் சமகாலப் பதிவு ஒன்று அல்லது அதன் மீளாக்கம் ஒன்று எனவும், அத்துடன் பதிவு அல்லது மீளாக்கம் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), அத்துடன் (ஈ) என்னும் பந்திகளில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியதிலிருந்து எனவும் ஒரு பதிவை அல்லது மீளாக்கத்தைக் கொண்டிருந்தால்;

(ஆ) அத்தகைய சான்று, விடயத்திற்கே ஒரு சொல் மாற்றம், மொழிபெயர்ப்பு மாற்றம் அல்லது உருமாற்றம் ஒன்றைக் கொண்டிருக்குமாயின் அத்தகைய பதிவு அல்லது மீளாக்கம் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள எவையேனும் நிபந்தனைகளை திருப்திப்படுத்துகின்றன;

(இ) அத்தகைய சான்று ஓர் இணைப்படி உண்மையானது எனவும், இணைப்படி செய்யும் நடைமுறைமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது எனவும், 4 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய இணைப்படியைக் கொண்டிருந்தால்;

(ஈ) அத்தகைய சான்று, ஒரு கணனியினால் தயாரிக்கப்பட்ட ஏதேனும் கூற்று ஒரு கணனியினால் தயாரிக்கப்பட்டிருந்தது எனவும், 5 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் (அ), (ஆ), (இ) ஆகிய பந்திகளில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள், அத்தகைய கூற்று கணனி என்பன தொடர்பில் திருப்திப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அத்தகைய கூற்றில் அடங்கியுள்ள தகவலைக் கொண்டிருந்தால்;

(உ) அத்தகைய சான்று, ஒரு கணனியினால் தயாரிக்கப்பட்ட கூற்றொன்றின் விடயத்திற்கேற்ப சொல்மாற்றம், மொழிபெயர்ப்பு, மாற்றம் அல்லது உருமாற்றம் ஒன்றைக் கொண்டிருக்குமாயின் அத்தகைய கூற்று, (5) ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் எதனையும் திருப்திப்படுத்துகின்றது எனவும்;

(ஊ) அத்தகைய சான்று, ஓர் இணைப்படி உண்மையானது எனவும், இணைப்படி செய்யும் எந்திரம் ஒன்றினால் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய இணைப்படியைக் கொண்டிருந்தால்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு விடயத்தைக் கூறுகின்ற ஆளின் அறிவுக்கெட்டியவரையும் அவரது நம்பிக்கைக்கேற்பவும் அதைக் கூறுதல் போதியதாதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், நீதிமன்றமானது, எதிர் தரப்பினரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீது சத்தியக் கடதாசியை செய்தவரை அத்துடன்/அல்லது சத்தியக் கடதாசியில் தரப்பட்டுள்ள விடயங்கள் எவற்றுடனும் பரிச்சயமானவரெனச் சொல்லப்படும் எவரேனும் வேறு ஆளை, திறந்த நீதிமன்றத்தில் சத்தியக்கடதாசியில் தரப்பட்டுள்ள விடயங்களில் எதனையும் அல்லது அதனுடன் தொடர்புடையதாகக் கூடிய அல்லது அதன் இடைநேர்வினை வாகக் கூடிய எதேனும் வேறு இயைபான விடயத்தைத் தொடர்புபடுத்தி விசாரணை செய்யலாம்.

### அறிவித்தல், அணுகுதல், சோதனை என்பன

7. (1) ஒரு வழக்கு நடவடிக்கைக்கான ஏதேனும் திறத்தவர், அத்தகைய வழக்கு நடவடிக்கையின்போது 4 ஆம் அல்லது 5 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் சான்றை அளிக்க உத்தேசிக்கின்றவிடத்து, பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :— சோதனைக்கான அணுகுதலுக்கும் அறிவித்தல் கொடுக்கப்படுதல்.

(அ) அத்தகைய சான்றை அளிப்பதற்கு உத்தேசிக்கின்ற திறத்தவர், விசாரணைக்கு அல்லது விளக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிந்தாமல், எதிர்த் திறத்தவருக்கு அறிவித்தல் கொடுத்தபின்னர், சான்றின் ஒரு பிரதியுடன் அல்லது சான்றின் தன்மையை விளங்கிக் கொள்வதற்கு எதிர்த்திறத்தவரை இயலச் செய்வதற்குப் போதியனவான அதன் அத்தகைய விபரங்களுடன், அத்திறத்தவரினால் அளிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டவாறான அத்தகைய சான்றின் ஒரு நிரலை நீதிமன்றத்திலிடுதல் வேண்டும் அல்லது கோப்பிடச் செய்தல் வேண்டும்;

(ஆ) முற்போந்த ஏற்பாட்டின்கீழ் ஓர் அறிவித்தல் எந்தத் திறத்தவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த எவரேனும் திறத்தவர் அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின்வா பதினைந்து நாட்களினுள் பின்வருவனவற்றை அணுகிச் சோதனை செய்வதற்கு அனுமதிக்கப்படுவதற்கு அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கின்ற திறத்தவருக்கு விண்ணப்பம் செய்யலாம்:-

(i) அளிக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்ட சான்று;

(ii) சான்றைத் தயாரிப்பதற்கெனப் பயன்படுத்தப்பட்ட, விடயத்துக்கேற்ப, இயந்திரம், உபாயம் அல்லது கணனி;

(iii) சான்றின் தயாரிப்புத் தொடர்பான எவையேனும் பதிவேடுகள் அல்லது அத்தகைய தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட முலறமை;

(இ) அத்தகைய சான்றை, எந்திரத்தை, உபாயத்தை, கணனியை, பதிவேடுகளை அல்லது முறைமையை அணுகிச் சோதனை செய்வதற்கு அனுமதிக்கப்படுவதற்கான விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மீது அத்தகைய சான்றை எண்பிப்பதற்கு உத்தேசிக்கின்ற திறத்தவர், நியாயமான நேரத்தினுள், ஆனால் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றபின்னர் பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல், வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பிக்கும் திறத்தவருக்கு அல்லது அவரின் முகவர்களுக்கு அல்லது நியமத்தர்களுக்கு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய சான்றை எந்திரத்தை, உபாயத்தை கணனியை, பதிவேடுகளை அல்லது முறைமையை அணுகிச் சோதனை செய்வதற்கு ஒரு நியாயமான சந்தர்ப்பத்தை ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

(ஈ) அத்தகைய சான்றை அளிப்பதற்கு உத்தேசிக்கின்ற திறத்தவர் அனுகிச் சோதிப்பதற்கான விண்ணப்பத்திற்கு இணங்கி யொழுக இயலாதிருக்கின்றவிடத்து அல்லது அதற்கு இணங்கி யொழுகாதவிடத்து, அல்லது திறத்தவர்கள், அறிவித்தல் அல்லது அனுகிச் சோதனை செய்வதற்கான விண்ணப்பம் அல்லது சோதனையின் முறையும் அளவும் தொடர்பிலான ஏதேனும் விடயம் பற்றி உடன்பட இயலாதவிடத்து, நீதிமன்றமானது, இரு திறத்தவர்களில் ஒரு திறத்தவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, நீதியின் நலன் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம் அல்லது அத்தகைய பணிப்பை விடுக்கலாம்.

(2) ஒன்பதாம், 10 ஆம் பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் சான்றை அளிக்க உத்தேசிக்கின்ற எவரேனும் திறத்தவர் மேற்கூறப்பட்டவாறு அறிவித்தல் கொடுக்கத் தவறுகின்றவிடத்து, அல்லது அனுகி சோதனையிடுவதற்கான விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல் அதற்கான நியாயமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தத் தவறுகின்றவிடத்து, அல்லது (ஈ) என்னும் பந்தியின் கீழ் நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, அத்தகைய திறத்தவர், எந்தச் சான்று தொடர்பில் தவறுதல் ஏற்பட்டதோ அந்தச் சான்றை அளிப்பதற்கு அனுமதிக்கப்படலாகாது.

ஒப்புதல்கள்

ஒப்புதல்கள். 8. (1) ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், எதிர்திறத்தவரினால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஏதேனும் நிகழ்வின் ஏதேனும் சான்றை அளிப்பது எவரேனும் திறத்தவருக்கு அவசியமாதலாகாது.

(2) ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஒரு நிகழ்வைத் தாபிப்பதற்கு இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் ஏதேனும் சான்றை அளிக்க உத்தேசிக்கப்படுகின்றவிடத்து, திறத்தவர்கள் பிணக்கிலில்லாவிடின், அத்தகைய சான்றின் ஏல் தகைமை தொடர்பாக இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் திருப்திப்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் காண்பித்தல் அத்தகைய சான்றை அளிக்கும் திறத்தவருக்கு அவசியமாதலாகாது.

(3) ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், நிகழ்வொன்றைத் தாபிப்பதற்கு அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கான திறத்தவர்கள் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் சான்றை அளிக்கின்றவிடத்தும் அத்துடன் அத்தகைய நிகழ்வு எதிர்திறத்தவர்களின் அறிவுக்கு எட்டியதாயிருந்தபோதிலும் அத்தகைய நடவடிக்கையில் அவரால் ஒப்புக்கொள்ளப்படாதவிடத்தும் நீதிமன்றமானது, அத்தகைய வழக்கு நடவடிக்கையில் இறுதித் தீர்ப்பு அல்லது கட்டளை அத்தகைய திறத்தவருக்குச் சார்பாக இருப்பினும் சரி இல்லாவிடினுஞ்சரி (அத்தகைய வழக்கு நடவடிக்கையில் அத்தகைய திறத்தவருக்கு அளிக்கப்படக்கூடிய வேறு எவையேனும் செலவுகளுக்கு மேலதிகமாக) அத்தகைய சான்றை அளிப்பதில் அவரால் உறப்பட்ட மொத்தச் செலவுகளை அளித்தல் வேண்டும்.

9. நீதிமன்றமானது, பொதுவான பயன்பாட்டிலுள்ள ஓர் இயந்திரம், ஓர் உபாயம் அல்லது ஒரு கணனியினால் அல்லது அதன் பயன்பாட்டினால் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பதிவின், மீளாக்கத்தின் அல்லது கூற்றின் செம்மையை ஊகிக்கலாம். சான்றாக அத்தகைய பதிவை, மீளாக்கத்தை அல்லது கூற்றை அளிப்பதற்கு உத்தேசிக்கின்ற எவரேனும் திறத்தவருக்கு அத்தகைய, பதிவின், மீளாக்கத்தின் அல்லது கூற்றின் எத்தகைமை தொடர்பாக, இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் திருப்திப்படுத்தப்பட்டுள்ளனவென காண்பிப்பது அவசியமாதலாகாது. ஊகங்கள்.

10. (1) ஆறாம் பிரிவின் ஏற்பாடுகளினது பயனைக்கொண்டு ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஒரு சத்தியக்கடதாசியைச் சான்றாக அளித்தவரும் பொய்யானதென அவர் அறிந்துள்ள அல்லது நம்புகின்ற அல்லது உண்மையானதென அவர் நம்பாத ஒரு கூற்றை வேண்டுமென்றே செய்கின்றவருமான எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஒரு நீதிவான் முன்னிலையில் சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்து ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் றண்டனைக்கும் ஒரு குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும். தவறுகள்.

(2) இப்பிரிவிலுள்ள எதுவும், ஏதேனும் நீதிமன்றம் அதற்கான அவமதிப்பிற்கு அல்லது வேறேதேனும் நீதிமன்றத்திற்கான அவமதிப்பிற்குத் தண்டனை விதிப்பதற்கு ஏதேனும் நீதிமன்றத்திற்குள்ள தத்துவங்களைக் குறைக்கப்படுவதாகவோ அல்லது வரையறுப்பதாகவோ வாசிக்கப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

11. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

## பாகம் IV

## பொருள் கோடல்

12. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி — பொருள் கோடல்.

"கணனி" என்பது தகவலின் களஞ்சியப்படுத்தலையும் நடைமுறையையும் உள்ளடக்கும் பணியை கொண்ட ஏதேனும் உபாயம் எனப் பொருள்படும் ;

"இணைப்படி" என்பது, மூலப்படி போன்ற அதே படிவினால் அல்லது அதே தாயத்தினால் அல்லது ஒளிப்படத்தின் மூலம் (பெருப்பித்தல்கள், குறைப்புக்கள் அத்துடன் சிறுப்பித்தல்கள் உள்ளடங்கலாக), அல்லது இலத்திரன் மூலம், பொறிமுறை மூலம் அல்லது இரசாயன மீளாக்கங்கள் மூலம், அல்லது மீளப்பதிவு மூலம் அல்லது மூலப்படியை செம்மையாக மீளாக்கம் செய்கின்ற சமமான வேறு தொழில்நுட்பங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட ஒரு நேரொத்தபடி எனப் பொருள்படும்;

"மூலம்" என்பது கணனியினால் தயாரிக்கப்பட்ட ஒரு பதிவு அல்லது மீளாக்கம் அல்லது ஒரு கூற்று தொடர்பாக அதே பதிவு அல்லது மீளாக்கம் அல்லது கூற்று என அல்லது அதை நிறைவேற்றும் அல்லது வழங்கும் ஓர் ஆளினால் அதே பயனைக் கொண்டிருக்க உத்தேசிக்கப்பட்ட அதன் ஏதேனும் சொல் மாற்றம், மொழிபெயர்ப்பு, மாற்றம்,உருமாற்றம் அல்லதுஇணைப்படி எனப் பொருள்படும் என்பதுடன், ஒரு கட்புலப் பதிவு தொடர்பாக அது தொடர்பான பதிவு நாடாவையும் ஒரு செவிபுலப் பதிவு தொடர்பாக எதிர்ப்படியையும் அல்லது அதன் ஏதேனும் அச்சுப்பதிவையும் உள்ளடக்கும்; அத்துடன் ஒரு கணனியினால் தயாரிக்கப்பட்ட ஒரு கூற்று தொடர்பாக ஒன்றில் கட்புலனால் வாசிக்கக்கூடிய அல்லது செவிப்புலனால் கேட்கக்கூடிய விடயத்திற்கேற்ப ஓர் அச்சு அல்லது வேறுபதிப்பை உள்ளடக்குகிறது;

"கூற்று" என்பது, சொற்களினால் அல்லது வேறுவகையில் செய்யப்பட்ட, நிகழ்வு பற்றிய ஏதேனும் பிரதிநிதித்துவத்தையும் உள்ளடக்குகிறது.

தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலு (உள்நாட்டு) ரூபா 1,387' (வெளிநாட்டு) ரூபா 1,849' ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் கம், 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.